**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண். 36/2022**

**Deposition of witness of Plaintiff – P.W.1 (முருகேசன்)**

**07.04.2026**

**வாதிகள் தரப்பு 1 வது சாட்சி முருகேசன் என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. இறந்துபோன எனது பெரியப்பா கணேசன் கைரேகை மட்டும் தான் வைப்பார் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி பாஸ்கரனை தெரியுமா என்றால் வழக்கிற்கு பிறகு தான் தெரியும். எனது பெரியப்பாவின் இரண்டாவது மனைவியின் மகன் தான் 1 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான்.
2. எனது பெரியப்பா 2 வது திருமணம் செய்த விவரமும், அவருக்கு குழந்தைகள் உள்ள விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பெரியப்பாவின் முதல் மனைவி பெயர் லெட்சுமி என்றால் சரிதான்.
3. எனது தாயார் பெயர் அஞ்சலை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கணேசன் எனது பெரியப்பா மற்றும் மணி எனது தகப்பனார் என்றால் சரிதான். அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள லெட்சுமி எனது பெரியம்மா மற்றும் அஞ்சலை எனது தாயார் ஆகும். அதில் குறிப்பிட்டுள்ள முருகேசன் நான் தான் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
4. எனது பெரியப்பாவிற்கு 2வது திருமணம் நடந்து அவருக்கு 1 மகன் உள்ள விவரம் 2004 ஆம் ஆண்டே எனக்கு தெரியும் என்றும், ஆனால் வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல.
5. பி.வா.சா.ஆ.1 இல் 2 வது பக்கத்தில் சுருண்டபட்டியில் வசித்து வரும் சின்னதம்பி மகன் முறையே கணேசன் தனக்காகவும், தனது மைனர் மகன் வயது சுமார் 16 உள்ள பாஸ்கர் என்பவருக்கு கார்டியனாகவும் சேர்த்து எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.
6. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**4 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**திறந்த நீதிமன்றத்தில் சாடசி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**